இலங்கைத் தேசிய நூற்பட்டியல் உட்பட நூற்பட்டியல்களைத் தொகுத்தலே. தேசிய நூற்பட்டியல் சேவைப் பிரிவின் பொறுப்பாகும். தேசிய நூற்பட்டியலானது நாட்டினுள் வெளிவரும் சகல வெளியீடுகளினதும் தகவல்களை உள்ளடக்கிய ஒரு ஆக்கபூர்வமான பட்டியலாகும். ஆகையால் எந்த ஒரு நாட்டிலும் தேசிய நூற்பட்டியலை வெளியிடுவது அந்நாட்டின் தேசிய நூலகத்தின் பொறுப்பாக கணிக்கப்படுகின்றது. நாட்டில் வெளியாகும் வெளியீடுகள் பற்றிய விபரங்களை விஞ்ஞான ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் வெளியிடும் ஒரே வெளியீடு தேசிய நூற்பட்டியலாகும்.

இலங்கைத் தேசிய நூல் விபரணப் பட்டியல்

இலங்கை தேசிய நூற்பட்டியலை தொகுத்து வெளியிடுதல் இலங்கை தேசிய நூலகத்தின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். இலங்கைத் தேசிய நூலகம் இச்செயற்பாட்டை 1974ஆம் ஆண்டில் இருந்து செய்து வருகிறது. 1962ஆம் ஆண்டில் இருந்து 1974 வரை இச்செயற்பாடானது தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தினால் செய்யப்பட்டு வந்தது. 1970ஆம் ஆண்டில் இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 1974 ஆம் வருடத்தில் இருந்தது. இச்செயற்பாடு நூலக சேவைகள் சபைக்கு பாரப்படுத்தப்பட்டது.

இவ்வருடத்தில் இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் 1990 (1 - 6) மற்றும் (7 - 12) தொகுதிகளின் தொகுப்பு செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

வெளிவரவிருக்கும் வெளியீடுகள் பற்றிய தகவல்கள்

நூல்களும் சாதனங்களும் வெளிவருவதற்கு முன்பே அவை பற்றிய விபரங்களை வாசகர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே இச்சேவையின் நோக்கமாகும். உலகின் பலநாடுகளில் இது மிகவும் பிரபல்யமானதொன்றாகும். இவ்வளவு காலமும் இலங்கையில் இல்லாதிருந்த வெளிவரவிருக்கும் வெளியீடுகள் பற்றிய விபரச் சேவையை தேசிய நூலகம் 1990ஆம் ஆண்டில் ஆரம்பித்துள்ளதுடன், இதன் கீழ் எதிர்காலத்தில் வெளிவரவிருக்கும் நூல்கள் பற்றிய விபரங்கள் வெளியீட்டாளர்களிடம் இருந்து பெற்று வாசகர்களுக்கு வழங்கப்படுகின்றது. இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் ஒரு பகுதியாக வெளிவரவிருக்கும் வெளியீடுகளின் பட்டியல் வெளியிடப்படுகின்றது.

தேசிய நூற்பட்டியலின் 1990ஆம் ஆண்டின் (7 - 12)ம் தொகுதிக்கு உரிய வெளிவரவிருக்கும் வெளியீடுகளுக்கான பட்டியல்களை தொகுக்கும் வேலை இவ்வருடத்தில் நிறைவு பெற்றுள்ளது.

கடந்தகால நூற்பட்டியல்

இலங்கைத் தேசிய நூற்பட்டியல் தொகுக்கும் செயற்பாடானது 1963ஆம் அண்டிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டமையால் அதற்கு முன்னர் தேசிய ரீதியில் வெளியிடப்பட்ட நூல்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய கடந்த கால நூற்பட்டியல்கள் தொகுக்கப்படுகின்றன.

1885 - 1962ஆம் காலப் பகுதிக்கான கடந்தகால நூற்பட்டியலைத் தொகுக்கும் ஆரம்பக் கட்டமாக கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட 1962ஆம் ஆண்டிற்கான கடந்த கால தேசிய நூற்பட்டியலைத் தொகுக்கும் தொழிற்பாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதன் பொருட்டு உபயோகிக்கப்படும் தேசிய சுவடிகள் கூடத்தின் கட்டாய வைப்புச் சேகரிப்பில் இல்லாத நூல்கள் பற்றிய விபரங்களை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரண்ட நூற்பட்டியல்

இதன் கீழ் ஒருவருடத்தில் வெளியிடப்படும் சகல நூற்பட்டியல்களிலும் உள்ள தகவல்களை உள்ளடக்கி ஒரு திரண்ட நூற்பட்டியல் வெளியிடப்படுகின்றது. இதற்கமைய இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் 1987ஆம் ஆண்டிற்கான திரண்ட நூற்பட்டியல் இவ்வருடத்தில் வெளியிடப்பட்டது.

பட்டியலாக்கப் பிரிவு

இலங்கைத் தேசிய நூலகச் சேகரிப்பின் பொருட்டு பெற்றுக் கொள்ளப்படும் சகல நூலக சாதனங்கள் பற்றிய சரியான நூற்பட்டியற் கட்டுப்பாட்டுத் தகவல்களை உள்ளடக்கிய பட்டியல் அட்டைகளைத் தயாரித்தலும் தேசிய நூலகத்தின் பட்டியலை தொடர்ந்து நடைமுறைப்படுத்தலும் பட்டியலாக்கப் பிரிவின் கடமைகளாகும். இலங்கைத் தேசிய நூலகத்தின் சேகரிப்பானது விசேட பாதுகாப்புப் பிரதேசத்தில் ஒழுங்குபடுத்தப் பட்டிருப்பதால் வாசகர்களுக்கு நேரடியாக நூற் சேகரிப்பை பரிசீலிக்க முடியாது. ஆகையினால் வாசகர்களுக்குத் தேவையான தகவல்களைத் தேடிப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய நூலகத்தின் பட்டியல் மிகவும் முக்கியமானதாகும்.

தேசிய நூலகப் பட்டியல்

தேசிய நூலகத்தின் பொருட்டு கடந்த பல வருடங்களாக பெற்றுக் கொள்ளப்பட்ட நூலக சாதனங்களை பட்டியலாக்கம் செய்வது இதன்கீழ் நடைபெறுகின்றது. 1991ஆம் ஆண்டில் தேசிய நூலகத்திற்கு கிடைத்திருந்த உள்ளூர் வெளியூர் பருவ வெளியீடுகளின் பட்டியலாக்க செயற்பாடுகளை செய்து முடிக்க சாத்தியமானது. அதேபோல தற்போது கிடைத்துவரும் சகல நூல்களும் சாதனங்களும், உள்ளூர், வெளியூர் பருவவெளியீடுகளும் பட்டியலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வருடம் தேசப்படங்களைப் பட்டியலாக்கம் செய்யும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆவணவாக்கற் சேவைப் பிரிவு

தேசிய நூலகத்தில் உள்ள தகவல்கள், மற்றும் நாட்டினுள் பரவிக் கிடக்கும் தகவல்களைச் சேகரித்து வாசகர்கள் இலகுவாக பிரயோசனப்படுத்தக் கூடிய வகையில் வழங்குதல் ஆவணவாக்கற் சேவைப் பிரிவின் மக்கிய பொறுப்பாகும். ஆவணவாக்கற் சேவைப் பிரிவிற்கு தேசிய, சர்வதேச ரீதியில் முக்கியமான பல பொறுப்புக்கள் பாரப்படுத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட துறைகளிலான நூற்பட்டியல்களையும் தொகுத்தல், தேசிய ஒருங்கிணைந்த பட்டியல்களையும் தேசிய உசாவு மத்திய நிலையத்தையும் நடைமுறைப்படுத்துதல் போன்றன இப்பிரிவினால் இப்போது செய்யப்பட்டுவரும் பிரதான செயற்பாடுகளாகும்.

தேசிய ஒருங்கிணைந்த பட்டியல்

நாட்டில் வெளியிடப்பட்ட சகல வெளியீடுகளையும் சகல நூல்களையும் மற்றும் நாட்டின் தேசிய நூலகத்திற்கு பெற்றுக் கொள்வது சிரமமமான காரியமான படியால் குறிப்பிட்ட வெளியீடுகளை நோக்கி வாசகர்களை வழிநடத்துவதற்கு இம்மத்திய நிலையம் உபயோகிக்கப்படுகின்றது. இதற்கேற்ப நாட்டின் ஏனைய பிரதான நூலகங்களில் உள்ளள நூலக சாதனங்கள் பற்றிய விபரங்கள் தேசிய நூலகத்தில் ஒன்று திரட்டப்படுகின்றன. இவை படிப்படியாக நீண்ட காலம் செய்யப்பட வேண்டியதொன்றாகும். கடந்த வருடம் இதன் பொருட்டு மிகவும் பலமான அடித்தளம் ஒன்றுடன் கூடிய திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. தற்போது தேசிய ஒருங்கிணைந்த பட்டியலின் பொருட்டு இலங்கையின் 06 முக்கிய நூலகங்கள் பங்களிப்புச் செய்கின்றன.

தேசிய உசாவு மத்திய நிலையம்

சமூக விஞ்ஞான ஆவணவாக்கல் மத்திய நிலையத்தில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் கேள்விகளுக்கு பல்வேறுபட்ட

தகவல்களை வழங்குவதே இம்மத்திய நிலையத்தின் பிரதான செயற்பாடாகும். தபால், தொலைபேசி மற்றும் தனிப்பட்ட முறையில் கேட்கப்படும் இக்கேள்விகளின் பொருட்டு தேவையான போட்டோப் பிரதிகளை வழங்குதல், அதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அவர்களை அனுப்புதல், வெளியீடுகளை வழங்குதல், தொடர்புடைய தகவல்களைச் சேகரித்து அவற்றை கடித மூலம் அனுப்புதல் மற்றும் தொலைபேசி மூலமான விசாரணைகளுக்கு உடனடியாகத் தகவல்களை வழங்குதல் போன்றன இந்நிலையத்தினால் செய்யப்படுகின்றன.

இம்மத்திய நிலையத்தின் உசாத்துணைச் சேகரிப்பின் பொருட்டு தொல் பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் "PGIAR Library Catalogue - Books Catalogued up to 31st August 1991" என்னும் உசாத்துணை நூல் இவ்வருடம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

பட்டியல்கள் தொகுத்தல்

பட்டியல்கள் மற்றும் விபரக் கொத்துக்கள் தொகுத்தலின் கீழ் இவ்வருடத்தில் சமூக விஞ்ஞான நூலகங்கள், தகவல் மத்திய நிலையங்கள், தரவு வங்கிகள் பற்றிய பட்டியல் - 1990இன் இரண்டாவது பதிப்பு அச்சிடக் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மாநாட்டு நூல் - 1990இன் தொகுப்பு வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. அரசாங்க வெளியீடுகள் பற்றிய பட்டியல் - 1990 தொகுப்பிற்கு தேவையான தகவல்கள் இவ்வருடம் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், சார்க் நூற்பட்டியலானது வெளியிடப்பட்டுள்ளது.

கணனி தகவற் சேவை

சரியான நவீன தகவல்களை வழங்குவதற்காக கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நூலகச் சேகரிப்பை படிப்படியாக கணனிமயப்படுத்தும் செயற்பாடு இவ்வருடம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேசிய நூலகத்தின் உசாத்துணை நூல்களின் சேகரிப்பை கணனிமயப்படுத்தும் செயற்பாடும், யுனெஸ்கோ சஞ்சிகைகள் சேகரிப்பில் இலங்கை தொடர்பாக உள்ள கட்டுரைக்கான சுட்டிகளை கணனிமயப்படுத்தும் செயற்பாடும், சர்வதேச நியம நூல் இலக்க திட்டத்தின் கீழ் புதிதாக பதிவு செய்து கொண்ட வெளியீட்டாளர் பற்றிய விபரங்களை அத்தரவுத் தளத்தில் சேர்த்துக் கொள்ளும் செயற்பாடும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

கணனி தகவல் சேவையை மேலும் விரிவு படுத்த தேசிய நூலகத்தின் கணனி மயப்படுத்தற் செயற்பாடுகளின் பொருட்டு இரு கணனி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நூலக அபிவிருத்தி ஆராய்ச்சிப் பிரிவு

நாட்டினுள் சட்ட ரீதியானதும் ஒழுங்கு முறையிலானதுமான நூலகச் சேவையின் பொருட்டு தேவையான தளத்தை அமைப்பதே அபிவிருத்தி ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய குறிக்கோளாகும். இதன்கீழ் நூலகங்களை ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தும் செயற்திட்டத்தை திட்டமிட வேண்டி நேரிட்டுள்ளது. நூலகத் தெழில்சார் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல், நூலக அபிவிருத்தி உதவிகளை வழங்குதல், பிரதேச சபை நூலக அபிவிருத்திச் செயற்திட்டம், நூலக மதிப்பீடு போன்றன இப்பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும்.

நூலகங்களின் பொருட்டு தொழில்சார் ஆலோசனைகள் வழங்குதல்

நூலக ஒழுங்கமைப்பு மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு ஆலோசனைகளை வழங்குதல் தேசிய நூலகத்தின் முக்கிய சேவைகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் 1991ஆம் ஆண்டில் 38 நூலகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்சார் ஆலோசனைகளைப் போலவே கட்டிடங்களின் வரைபடங்கள், நூலக மரத்தளபாடங்களின் மாதிரிகள் மற்றும் விரிவுரையாளர்களை வழங்குவது போன்ற பிற சேவைகளும் வழங்கப்படுகின்றன.

நூலக அபிவிருத்தி உதவி

நூலகங்களின் பொருட்டு நூல் அன்பளிப்பு

பல்வேறுபட்ட நூலங்களின் தரத்தை உயர்த்தும் பொருட்டும், அவ்வவ் நூலகங்களின் வாசகர்களுக்கு புதிய நூல்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தையும் குறிக்கோளாகக் கொண்டு இச்சேவை நடத்தப்படுகின்றது. தேசிய நூலகத்தின் பல்வேறு வெளியீட்டு உதவித் திட்டங்களின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் வெளியீடுகள் இதன் பொருட்டு உபயோகிக்கப்படுகின்றன. நூல்களையும், சாதனங்களையும் அன்பளிப்புச் செய்யும் போது அந்தந்த நூலகங்களின் தன்மை, நிதிவசதி, வாசகர்களின் எண்ணிக்கை போன்றன கவனத்தில் கொள்ளப்படும்.

இவ்வருடம் 623 நூலங்களின் பொருட்டு ரூபா 20,29,536.00 பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்து இவ்வருடம் நூல் அன்பளிப்புக்களின் பெறுமதியானது 63.4 வீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேபோல அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடமாடும் நூலக சேவையின் பொருட்டு ரூபா 40,000.00 பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ரன்பர்லி சேவை

நாட்டில் உள்ள நூலகங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கும் பொருட்டு ஐக்கிய இராச்சியத்தின் ரன்பர்லி நூல் உதவிச் சேவையினால் தேசிய நூலகத்திற்கு காலத்திற்குக் காலம் நூல்கள் வழங்கப்படுகின்றன. இவ்வருடம் இத்திட்டத்தின் கீழ் 3750 நூல்கள் நூலகங்களுக்கிடையே அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மரத் தளபாடங்கள் வழங்குதல்

தெரிவு செய்யப்பட்ட நூலகங்களின் பொருட்டு மரத்தளபாடங்கள் அன்பளிப்புச் செய்தல் இவ்வருடத்திலும் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. நூலகம் ஒன்றிற்கு அன்பளிப்புச் செய்யப்படும் மரத்தளபாடத் தொகுதியில் வாசிப்பு மேசை, கதிரை, நூற்தட்டு, புதினத்தாள் தாங்கி விளம்பரப் பலகை, நூலகர்மேசை, கதிரை, பட்டியற் கோவைப் பேழை என்பன உள்ளடங்கும். இவ்வருடம் 21 நூலகங்களின் பொருட்டு ரூபா 579,150.00 பெறுமதியான மரத் தளபாடங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மாகாண சபை நூலகங்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

இப்புதிய செயற்திட்டமானது கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டத்தின் கீழ் புதிய நிருவாக அமைப்பிற்கு பொருத்தமான விதத்தில் நூலக சேவையை மறுசீரமைப்பது தொடர்பாக பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கிய ஆலோசனையானது சகல மாகாண சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலும் நூலக அதிகார சபை ஒன்றை அமைப்பதாகும். சம்பந்தப்பட்ட மாகாண சபையினுள் நூலக சேவையைத் திட்டமிடுதல், அதை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான சகல அதிகாரங்களையும் இந்த அதிகார சபைக்கு வழங்க வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக ஊவா மாகாண சபை மற்றும் வடமத்திய மாகாண சபைகளில் அரச மற்றும் மாகாண நிறுவனங்களின் உதவியுடன் இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் இவ் வருடத்துள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபை நூலக அபிவிருத்தித் திட்டம்

நூலகக் குழு

பிரதேச சபைகளின் நூலக திட்டத்தின் கீழ் அந்தந்தப் பிரதேச சபை, மாநரசபை, நகரசபை தொடர்பான நூலகங்களின் அபிவிருத்திக் குழுக்களை அமைத்தல் 1991.07.15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டத்தின் பலாபலனாக குறிப்பிட்ட வருட இறுதியில் 155 ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கு சாத்தியமானது. அதேபோல தேசிய நூலகத்தினால் நூலகங்களின் பொருட்டு கட்டிட

மற்றும் மரத்தளபாட மாதிரித் திட்டங்கள், தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல் போன்ற உதவிகளும் வழங்கப்பட்டன.

நூலக மதிப்பீடு

நாட்டில் உள்ள பல்வேறு நூலகங்கள் பற்றிய புள்ளிவிபரங்களைத் திரட்டுவதும் அதற்கேற்ப அவற்றின் அபிவிருத்தியைத் தேடிப்பார்ப்பதும் நூலக மதிப்பீட்டின் நோக்கமாகும். மாவட்ட ரீதியிலான நூலக மதிப்பீட்டு வேலையானது இவ்வருடம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்கீழ் பொலன்னறுவை, கம்பஹா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மதிப்பீட்டு வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள், மற்றும் கல்விக் கல்லூரிகளின் நூலகங்களை மதிப்பீடு செய்யும் வேலையை 1991ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு சாத்தியமானது.

நூற் கண்காட்சி

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள வாசகர்களுக்கு புதிய வெளியீடுகள் பற்றி அறியத்தருவதும், சகாய விலையில் நூல்களை விற்பனை செய்வதுமே தேசிய நூலகத்தின் நூற் கண்காட்சிகளின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1991ஆம் ஆண்டில் இரத்தினபுரி, பதுளை, கொழும்பு, முதலாவது மகாபொல, றுவன்வலை கம்உதாவ 1991, கம்புறுப்பிட்டிய, கொழும்பு சாக் சர்வதேச நூற் கண்காட்சி, பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்திலும் களுத்துறை ஜனாதிபதி நடமாடும் சேவையிலும் நூற் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. அதேபோல இந்நிலையங்களில் நூல் விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு வாசகர்களுக்கு சகாய விலையில் நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இலங்கைத் தேசிய நூலகத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் 'போதைப் பொருட்களை விலக்குவோம், புத்தகங்களை வாசிப்போம்' என்னும் தலைப்பின் கீழ் பம்பலப்பிட்டி களரிகள் சங்கத்தினால் நடத்தப்பட்ட இருநாள் நூற் கண்காட்சியும், மாநாடும், 10 நாட்களாக நடைபெற்ற சார்க் சர்வதேச நூற் கண்காட்சியும், மாநாட்டுத் தொடரும் மறக்க முடியாத விடயங்களாகும். சார்க் நூற் கண்காட்சியானது பெரும் தொகையான உள்ளூர், வெளியூர் வெளியீட்டாளர்கள், நூல் விற்பனையாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் பங்குபற்றிய முதலாவது சர்வதேச நூற்கண்காட்சியானதுடன் அதற்கு பொது மக்களிடம் இருந்து கிடைத்த வரவேற்பு பெரிதும் மகிழ்ச்சி தருவதாகும்.

நூல் இரவற் சேவை

நூலக வளங்களில் குறைபாடுடைய நூலகங்களிற் உதவி செய்யும் நோக்குடனேயே இச்சேவையானது நடைமுறைப்படுத்தப்பட்டுகின்றது. நூல் இரவற் சேவையானது கோட்டை, கம்பஹா, மத்திய கொழும்பு, கொலன்னாவை போன்ற கல்விப் பிரிவில் உள்ள நூலகங்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்கேற்ப செய்யப்பட்ட 10 நூலகங்களுக்கு மட்டும் காலத்திற்குக் காலம் புதிய நூற் தொகுதிகள் இரவலாக வழங்கப்படுகின்றன. இச்சேவையினால் புதிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு தகுதியற்ற பாடசாலை நூலகங்களுக்கு பெரிய அளவில் உதவி கிடைக்கின்றது.

நூலக நியமங்களைத் தொகுத்தல்

கடந்த வருடம் இலங்கையில் உள்ள பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களின் பொருட்டு நியமங்கள் தொகுக்கப்பட்டன. 1991ஆம் ஆண்டில் இப்படித் தயாரிக்கப்பட்ட சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு சகல பிரதேசசபை நூலகக் கழுக்களுக்கும் நகரசபை நூலகக் குழுக்களிற்கும், விநியோகிக்கப்பட்டது. அந்நூலகங்களுக்கும் மேலால், நியமங்களைப் பெற்றுத் தரும்படி கேட்டுக் கொண்ட பிற பொது பாடசாலை நூலகங்களுக்கும் நியமங்களின் அறிக்கைகள் வழங்கப்பட்டன. திணைக்கள நூலகங்களுக்கான நியமங்களைத் தயாரிப்பதற்காகவும் தேசிய நூலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலகத்தின் நூல் விற்பனை நிலையம்

கடந்த வருடம் திறந்து வைக்கப்பட்ட இந்நூல் விற்பனைக் கூடத்தின் நோக்கமானது நூல்களைப் போல நூலகங்களுக்குத் தேவையான எழுதுகருவிகள், நூற் சேர்ப்பு இடாப்பு, நூல் அட்டை, நூற்பை, நாட்தாள், பட்டியல் அட்டை போன்றவற்றையும் சகாய விலையில் பெற்றுக் கொடுப்பதாகும். இவ்வருடத்தில் நூல் விற்பனை நிலையத்தில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 444, 323.00 ஆகும்.

புதிய வெளியீடுகளின் கொள்வனவு

இத்திட்டமானது எழுத்தாளர்களுக்கு உதவி வழங்கும் செயற்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்கேற்ப நூலகங்களுக்குப் பொருத்தமானதும் குறிப்பிட்ட ஆண்டிலோ அல்லது அதற்கு முந்திய ஆண்டின் கடைசி மூன்று மாதப் பகுதியிலோ வெளியிடப்பட்ட புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதன்கீழ் அதிகூடிய 5,000 ரூபா என்ற அடிப்படையில் நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. 1991ஆம் ஆண்டில் ரூபா 438,415.00 பெறுமதியான 284 புதிய நூல்களின் 11,885 பிரதிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

பிரதேச சபை மட்டத்தில் சார்க் மாநாட்டின் பொருட்டு விழாக்களை ஒழுங்கு செய்தல்

தேசிய நூலக சேவைகள் சபையின் வேண்டுகோளின் பிரகாரம் 46 பிரதேச சபையின் நூலகங்கள் சார்க் மாநாட்டின் பொருட்டு விழாக்களை ஒழுங்குபடுத்தி இருந்தன. இந்நூலகங்களுக்கு நூல் அன்பளிப்புச் செய்யும் விழவானது 1991 டிசெம்பர் 16ஆம் திகதி நடைபெற்றது.

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

நூலகர்களுக்கு மேலதிக பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கான குறுங்காலப் பயிற்சி நெறிகளை ஒழுங்குபடுத்துவதே கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் நோக்கமாகும். நூலகத்துறையிலான புதிய அபிவிருத்தி பற்றி அறிவைப் பெற்றுக் கொடுத்தல், அறிவை புதுப்பித்தல், விரிவுபடுத்துதல் என்பன இப்பாடநெறியின் நோக்கமாகும். இதற்கும் மேலால் நூலக விஞ்ஞானம் பற்றிய எவ்வித விளக்கமும் இல்லாத பாடசாலை பிரிவேனா போன்றவற்றின் நூலகங்களுக்கும் பொறுப்பாக கடமையாற்றும் நூலகர்களை பயிற்றுவிப்பதும், சபையின் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

நூலக விஞ்ஞான தபால் மூல பாடநெறி

நூலக தகவல் விஞ்ஞான தபால் மூலப் பாட நெறிகளுக்கான அடுத்த கல்வி ஆண்டிற்கான நூலக தகவல் விஞ்ஞான தபால் மூலம் பாடநெறியின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு 225 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பாடசாலை நூலகர்களின் பொருட்டான பாடநெறி

சரியான முறையில் நூலகக் கல்வியைப் பெறாது ஆசிரிய நூலகர்களாகக் கடமையாற்றும் நூலகர்களுக்கு அது பற்றிய அடிப்படை அறிவு இதன்மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. தற்போது நாட்டில் உள்ள பாடாசலை நூலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நூலகர்களே உள்ளனர். தேசிய நூலகத்தினால் இந் நூலகங்களுக்குப் பொறுப்பாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நூலக முகாமைத்துவம் மற்றும் நூலக விஞ்ஞானம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு நூலக சேவைகள் சபையினால் பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன. இவ்வருடம் ஆசிரிய நூலகர்களை பயிற்றுவிக்கும் பாடநெறி ஒன்று அநுராதபுர மாவட்டத்தில் 100 பாடசாலை ஆசிரிய நூலகர்களின் பொருட்டு நடத்தப்பட்டது.

பொது நூலக நூலகர்களுக்கான பயிற்சிப் பாடநெறி

நாட்டில் உள்ள பொது நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பொது நூலகர்களுக்கும் நூலக உதவியாளர்களுக்கும் பயிற்சிப் வழங்கும் பொருட்டு நான்கு பாட நெறிகள் நடத்தப்பட்டன. இப்பாடநெறிகளில் 160 பேர் பங்குபற்றினர்.

மடாலய நூலகர்களுக்கான பாடநெறி

மடாலய நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இவ்வருடம் குருனாகல் மற்றும் மாவட்டங்களைச் சேர்ந்த மடலாய நூலகங்களின் 125 நூலகர்களுக்கு இரு பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

தொழில்நுட்ப நிறுவனங்களின் நூலகர்களின் பொருட்டான பயிற்சிப் பாடநெறி

தொழில்நுட்ப நிறுவனங்களின் நூலகர்களின் பொருட்டு நடத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறியில் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த 29 நூலகர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய நூலக மகாநாடுகள்

இலங்கைத் தேசிய நூலகமானது வெளிக்கள அமைப்புக்களின் உதவியுடன் இலக்கிய மாநாடுகளை நடத்தி வருகிறது. இவ்வருடத்தில் கீழ் காட்டப்பட்டுள்ள மாநாடுகள் தேசிய நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டன.

(01) போதைப் பொருட்களை விலக்குவோம் - புத்தகங்களை வாசிப்போம் 1991.02.06 - 1991.02.07

(02) இலங்கையில் வைப்புச் சட்டம் 1991.11.07

சேவைக்காலப் பயிற்சி

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நூலகங்களுக்கு பொறுப்பாக உள்ள இரு அலுவலர்களுக்கு 1991.07.08ம் திகதி தொடக்கம் 1991.07.19ஆம் திகதி வரை தேசிய நூலகத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.

செயல்முறைப் பயிற்சி

இலங்கை நூலக சங்கத்தின் பாட நெறியைப் பின்பற்றும் இரு மாணவர் குழாத்திற்கு தேசிய நூலகத்தில் செய்முறைப் பயிற்சி வழங்கப்பட்டது.

1991.11.18ஆம் திகதி தொடக்கம் 1991.11.29ஆம் திகதி வரையும்

1991.12.02ஆம் திகதி தொடக்கம் 1991.12.13ஆம் திகதி வரையும்

தேசிய நூலகத்தின் சொற்பொழிவுத் தொடர்

இச்சொற்பொழிவுத் தொடரின் கீழ் இவ்வருடத்தில் 12 மாதாந்த சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. அச்சொற் பொழிவுகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறாகும்.

01) ශ්‍රී ලංකාවේ බුද්ධිමය දේපළ පනතින් ආරක්ෂණය

කරුණු ලබන ප්‍රකාශන කිරීමකි - சட்டத்தரணி திரு மஹிந்த ரளப்பனாவ

02) Library Development Around the World : A Personal View - Mr. J. Stephen Parker

03) සන්නිවේදනයේ ශ්‍රව්‍ය දෘශ්‍ය ක්‍රියාවලියේ විද්‍යාත්මක පදනම - டாக்டர் திரு ரஞ்சன் அபேசிங்க

04) Perse and creed : The Anti moor Riot of 1915 - Dr. Michel Roberts

05) විශ්ව විද්‍යාල පුස්තකාල පරිපාලනය - திருமதி சுமனா ஜயசூரிய

06) සිංහල භාෂාවේ ශබ්දකෝෂ කරණය - டாக்டர் திரு. புஞ்சிபண்டா சன்னஸ்கல

07) Regional Co-operation through SARRC - Mrs. Gwenne Herat

08) බෞද්ධ විශ්වකෝෂ ව්‍යාපෘතිය එහි ආරම්භය හා වර්තමානය - டாக்டர் டபிள்யூ.ஜீ. வீரரத்ன

09) ශ්‍රී ලංකාවේ රූපවාහිනී සේවාව පිළිබඳ හැඳින්වීමක් - திரு. அசோக மாளிமகே

10) දකුණු ආසියා කලාපීය සහයෝගිතාවය - திரு. எட்வின் ஆரியதாஸ

11) පුස්තකාල සේවාව සඳහා පරිගණක භාවිතය - தனபா குணசேகர

12) ඉන්ලා මොස්කව් සමුළුව - எம்.எஸ்.யு. அமரசிறி

வெளியீட்டுப் பிரிவு

சபையின் வெளியீட்டுச் செயற் திட்டங்களில் உதவுதலும் அதைக் கொண்டு நடத்துவதும் இப்பிரிவின் பிரதான செயற்பாடாகும். வெளியீட்டுப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான செயற்திட்டங்களாவன வெளியீட்டு உதவிச் செயற் திட்டம், புதிய வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் செயற் திட்டம், சிறப்பு இலங்கியங்களை தொகுத்து வெளியிடும் செயற் திட்டம் மற்றும் தேசிய நூலகத்தின் வெளியீடுகளின் செயற்திட்டம் என்பன ஆகும். இதற்கும் மேலால் சபையின் செயற்பாடுகளுக்குத் தேவையான தொடர்பு சாதனங்களிலான பிரசார சொற்பாடுகளும் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வெளியீட்டு உதவிச் செயற்திட்டம்

இலங்கைத் தேசிய நூலக சபையினால் 1984ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட, வெளியீட்டு உதவித்திட்டம் ஆசிரிய வெளியீட்டாளர்களுக்கு பாரிய அளவில் உதவி வழங்குகிறது. இது நாட்டில் உள்ள பிரதான வெளியீட்டு அபிவிருத்திச் செயற்திட்டமாகும். வருடம் தோறும் இத்திட்டத்தின் பொருட்டு 25 லட்சம் ரூபாக்கள் ஒதுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991ஆம் ஆண்டில் 130 வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், வெளியீட்டாளர் உதவித் திட்டத்தின் கீழ் இதுவரை 709 வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இச்செயற் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட புதிய வெளியீடுகள் இத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட புதிய வெளியீடுகள் கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

ஆசிரியர்	நூற்பெயர்
சேபாலி மாயாதுன்னே	සෙල්ලම් කාලේ
அனுர பீ. செனவிரத்ன	පාපිස්ස
டபிள்யூ.ஏ. ஜயசிங்க	අනාථයෙක් අහිසරැළියක්

பத்மசிறி பிரனாந்து	තණ අග පිණි බිඳු
சரத் விஜேசூரிய	නිරානන්දය
தெனகம சிறிவர்தன	දැහැටි දඬු
ஆரிய வங்ச ரணவீர	රන් රෝස
ஹரியட் ஊபேசிறி	බෙහෙත් බෙහෙත්
ஒருக்மான்குலமே சந்தன சுவாமி	හේන
ஜினேந்திரவம்ச த சில்வா	විශ්වය හා සසල හිරු
றிசிமன் அமரசிங்ஹ	ඓතිහාසික සීතාවක
விமலதாச சமரசிங்ஹ	පාවාඩ
ஜயதிஸ்ஸ த கொஸ்தா	මානව හිමිකම් පිලිබඳ හැඳින්වීමක්
பியதாஸ வலிகன்ந்தகே	රත්තරන් මිනිස්සු
சோமசிறி பள்ளேவல	හිස් වූ හිස්
சுவாமி வீரெபாக்குனே உபரத்ன	පැලැනෙත් වෙන් කළ ඉඩම්
ஆர் வீரக்கோன்	The Elephant Kraal and other stories
குணசேகர பண்டார	වෙල්ලස්සේ වීරයා
ஜயதுங்க பத்தினிகே	ජය සක් හඬ
சந்திர விக்கிரமகமகே	ස්තූප
கே.எம்.ஐ. ஸ்வர்ணசிங்ஹ	නිම් වළල්ලෙන් එහා ලෝකය
தர்மசிறி கமகே	හිත නිවෙන තැන්
சந்திர விக்ரமரத்ன	මැදි දුර දිවීම්
டபிள்யூ.ஏ. அபேசிங்ஹ	වේලාසන කොක්කු ඇවිත්
நிஹால் பீ. ஜயதுங்க	ස්වර්ණලතාගේ බොදවූ සිහිනය
எதிரிவீர சரச்சந்திர	බවකඩතුරාව
சில்வி சேனாதீர	ශ්‍රී ලංකාවේ විශ්ව විද්‍යාලයන්හි ශාස්ත්‍රපීඨ විෂය මාලා
டென்சி ஒடுகம	අපේ ඇත්තෝ
சிறிசேன விதானகே	මකර කුමරිය
விமலதாச சமரசிங்ஹ	සරණාගත
எல்.ஏ.டீ.ஏ. திஸ்ஸகுமார	පැරණි ලක්දිව අන්තානි ප්‍රදාන විධි
தர்மசிறி பியசேன	සිංහල ළමා කාව්‍ය විචාරය
குமார ஹெட்டி ஆரச்சி	මහද්වීපය
ஜயனந்த தர்மசிறி	ගම්මැද්දේ යාළුවෝ
ஜே.ஏ.டீ. பெரேரா	සොක්කානෝ රජානෝ
பர்சி ஜயமான்ன	සූ ෆි උපමා කතා
எஸ். தொடன்கொட	දෙවියෝ සිය දිවි නසාගනිති සහ තවත් කෙටිකතා
லக்ஷ்மன் கஹடபிற்றிய	තුන්යම් රෑ
மாலனீ விஜிதா விஜேவீர	පේ අයියා

முதியான்சே திசாநாயக்க	උඩරට ශාන්ති කර්ම සහ ගැමි නාට්‍ය සම්ප්‍රදාය
ஆனந்த விஜேவீர	පහනට තෙල්
உபாலி எஸ். தர்மபந்து	සිතේ බලේ
குணதாச யாபா	දයාබර ගුරුතුමිය වෙනටයි
ஈ.ஏ.ஜ.ரீ. ஏக்கநாயக்க	පෙළපාලිය
ஸ்வர்ணா சந்திர சேகர	සිංහල ළමා කවි
சுமித்ரா ராகுபத்த	අරගලය
கீதாங்சனி பிரதீபா சேரசிங்க	පින්මඳ දියණි සහ තවත් නිර්මාණ
கே.டபிள்யூ.ஏ.பீ. குலரத்ன	විසිවන සියවසේ කතාවක්
உதேனி ஜயவீர	හිරු නොදුටු මිනිස්සු
அயிலின் சிறிவர்த்தன	Another Dawn was Breaking
பி. சிறிகுமாரசிங்க	රූකඩ රූපන කලාව
ஸ்வர்ணா விஜேதுங்க	දෙවෙනි දශකය
தயாசேன குணசிங்க	නිල් තාරකාවට ගිය තිදෙනා
அலவத்தாகொட பிரேமதாச	නොදුටු කුමරතුගු
சுதானந்த லொக்குகமகே	මිපුප ලදීම් දරු නොලදීම්
பீ.பீ. அத்துள பீரிஸ்	සුභ සරණාගත සහ තවත් නාට්‍ය දෙකක්
ஹிங்குள்வல திசாநாயக்க	යකාගේ පොරොන්දුව
ஏ.வி. சுரவீர	Tread Softly
ரம்யலதா த சில்வா	අසමානයෝ
பியசேன ரத்துவிதான	පියගැට පෙළ
ரீ.எம். பரணகம	මිනිස් මුහුණේ අසිරිය
பியசேன ரத்துவிதான	ඔබේ හඳහනේ හත
அல்பட் வலிவிட்ட	වෘත්තීය පුවත්පත් කලාව
குலதிலக குமாரசிங்ஹ	සිංහල නවකතාවේ කලාත්මක මුහුණුවර හා මාර්ටින් වික්‍රමසිංහ
சரத் விஜேசூரிய	තැනිතලාව
நாளன் மென்டிஸ்	ශ්‍රී ලංකාවේ නාට්‍ය උත්සව ඉතිහාසය
அலெக் ரொபட்சன்	භාවනාවෙන් සැනසීම
தர்மசிறி கமகே	සංසාර දර්ශන
குலசேன பொன்சேகா	අන්තිම දුම්රිය
திஸ்ஸ காரியவசம்	සිරිලක දෙව්වරු
டபிள்யூ.ஏ. ஜயதிஸ்ஸ	මූලික සංඛ්‍යාන විද්‍යාව
ஜயதிலக கம்மல்லவீர	තාත්තලාගේ කතාව
புண்ணியகாந்தி விஜேநாயக்க	Yukthi and other stories
சந்திரசிறி பள்ளியகுரு	මහා ප්‍රාකාරයෙන් එහා
தனபால குணசேகர	පරිගණකය හා පුස්තකාල සේවාව

எம். விஜேரத்ன	කෙම්බිමක් සොයා
ம.ஆ. காமினி ஜயவர்தன	නරුණ අපට නීතිය
லலிதா கே. விதானாச்சி	The paddy Bird
விஜேசிறி வெத்தமுனி	දේශයට පිවය දුන් පනස්වෙනි දශකයේ කවි සඟරා
மாலினி ஈறியகம	පෙර පාසල
பீ. மனம்பேரி	මහනුවර රාජධානියෙහි නීතිය හා අධිකරණය
ஊசுலா விஜ்சூரிய	Ambergris
பொடிரத்ன அங்கமலே	ගඟ. පාරුව සහ අපි
கே.எஸ். பளிகக்கார	පාසල් කළමනාකරණය
பியசேன செனவிரத்ன	විෂ චිකිත්සාව සහ විෂ සර්පයෝ
சித்ரா ஐ பெரேரா	රූපතූ ලංකා
பிரேமதாச சிறீ அலவத்தகே	නවසඳ
சோமரத்ன பாலசூரிய	කරත්තය
பியசிறி கொடித்துவக்கு	බිළාලය
சோமபால ஜயவர்த்தன	හෙළ මහිමය
லஷ்மன் கஹட்டபிற்றிய	කල්පාන්තය
ஏ.பீ. ஹெட்டி ஆராச்சி	නිවටයා
லயசால் குணதிலக	කෘත්‍ය ගීත ශතකය
நாரா ாவில பற்றிக்	නොරඳන අමාදිය
புத்ததாச ஹேவகே	යාත්‍රාවක මිනිස්සු
ஆரியவங்ச ரணவீர	සඳ ඇඹින්දක්
புஸ்பா ரம்லனீ ரத்நாயக்க	කාලිමුත්තුගේ පුරවැසිභාවය
டபிள்யூ.எம்.என்.பீ. வீரசேகர	පැස්සුම් විද්‍යාව
பியசேன கஹந்தகமகே	නිමිනයක අඩහැරේ
தயா எதிரிசிங்ஹ	දාර්ශනික ආකල්ප
சிந்தா லக்மீ சிங்ஹாறச்சி	අපගේ ලෝකය
சுனந்த மஹெந்திர	සන්නිවේදන ගවේශන
டபிள்யு.எம்.என்.பீ. விஜேகோன்	කළහාමි
கத்லின் ஜயவர்தன	දාදු කැට
சந்தியா மீரிஹான்	නියං කොබෙයි
பீ.ஏ. ஹேமபால	ඇහැලේපොළ මහ නිලමේ
சோமபால ஜயவர்த்தன	සුළු බෝධි වංසය
சரத் யாபா பண்டார	කැඩපත් අංජනම
ஜயசிறி விஜேரத்ன	ගී මියුරු
தெனகம சிறிவர்தன	දේශප්‍රේමියෙකුගේ කතාවක එදිරිලන්ලේ
குணசிறி வீரசூரிய	විශ්ව මනස හා දේවත්වය

எச்.ஏ. சிறிவர்த்தன	හංස ගීතය
கே.டீ. பரணவிதான	ගාලු පුරාණය
பியதாச நிஷாந்த	මනුස්මෘතිය
ஜே.எம். சரத் தர்மசிறி	සෑ සුළඟ
சீதா குலதுங்க	ප්‍රේමය හා කෝපාග්නිය
எம்.ஏ. மனுரத்ன	බෞද්ධ ආර්ථික දර්ශනය
காமினி வேரகம	මුහුණට මුහුණ
என்.ரி. கருணாதிலக	බෙම්ගඟ බඩ චිත්ති
ரொஹான் பெரேரா	සමාජ රෝග
பந்துல ஜயவர்த்தன	සකල ජන නාටකය
சில்வி சேனாதீர	විශ්ව විද්‍යාල ශිෂ්‍යන්ගේ අධ්‍යයන දුෂ්කරතා
லசந்த த அல்விஸ்	මයාලොව වෙතට සහ ආපසු
எஸ்.ஜீ.எம். வீரசிங்க	සුසාන කාව්‍ය
பிரான்சிஸ் புலத்சிங்கள	බුලත් විට සහ සිංහලයා
பிரேமதாச சிறீ அலவத்தகே	ප්‍රස්ථාව පිරුළු ජනකතා
லஷ்மி த சில்வா	The Gajaman story
டபிள்யூ.ஆர். பொன்சேகா	ආවර්ජනා
பி.எம்.என். பண்டார	මූල්‍ය ප්‍රකාශන විශ්ලේෂණය සහ අර්ථ කථනය
சிட்னி மாகஸ் டயஸ்	ඇඳිරි නීතිය

சபையின் வெளியீடுகள்

1991ஆம் ஆண்டில் சபையின் வெளியீடுகளாக கீழ்க் காட்டப்பட்டுள்ள வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

1) A Bibliography of Bibliographies - Leelangi Wanasundara

2) Survey of social science Information centers and Users in Sri Lanka - S R Korale

3) සිංහල නවකතා ග්‍රන්ථ නාමාවලිය - ජී.ජී. පියරත්න

4) පුස්තකාල ප්‍රවෘත්ති 1991 (1-6) කලාප

1991 (7-12) කලාපය

சிறப்பிலக்கியங்களைத் தொகுத்தல்

இச்செயற்திட்டத்தின் கீழ் தற்போது கொள்வனவு செய்வதற்கு அரிதான பழைய இலக்கியங்களை மறுபடியும் தொகுத்து வெளியிடும் தொழிற்பாடு நடைமுறைப்படுத்தப்படும். இவ்வருடம் தொகுத்தல் முடிவடைந்துள்ள பன்சிய பனஸ். ஜாதகய, மற்றும் பூ ஜாவளிய போன்ற நூல்களை அச்சிடுவதன் பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பேணல் புதுப்பித்தல் பிரிவு

எதிர் காலத்தின் பொருட்டு தேசிய நூலகத்தின் சேகரிப்பை பாதுகாத்து வைத்தல் மிகவும் முக்கியமானதொரு தேவையாகும். அப்போதுதான் இவ் வளங்களை நிகழ்காலத்தைப் போல எதிர் காலத்திலும் பிரயோசனப்படுத்தக் கூடியதாக இருக்கும். தேசிய நூலகத்தில் நூலகசாதனங்கள் படிப்படியாக ஒழுங்குபடுத்துதல், பாதுகாத்தல், என்பனவே பேணல் புதுப்பித்தற் பிரிவின் நோக்கமாகும். தேசிய நூலகச் சேகரிப்பானது தொடர்ந்தும் பேணற் பிரச்சினைகளுக்கு இலக்கானதொன்றாகும். தேசிய நூலகத்திற்கு கணிசமான அளவு அரிய நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அவற்றில் அனேகம் தேசிய நூலகத்திற்கு கிடைக்கும் போது பாதிப்படைந்த நிலையிலேயே இருக்கின்றன, இவற்றின் பேணற் செயற்பாடுகளுக்கு முகம்கொடுக்கும் பொருட்டு விசேட நடவடிக்கைகளை எடுக்க வேண்டி நேரிட்டுள்ளது.

நூல் மட்டை கட்டுதல்

வெளிக்கள நூல் மட்டைக் கட்டுபவர்களின் உதவியைப் பெறுதல்

தேசிய நூலகத்தில் வைப்பிலிடப்பட்டிருக்கும் பெறுமதியான நூல்களை விசேட நிபுணத்துவத்துடன் பேணுவதற்கான வெளிக்கள நூல் மட்டை கட்டுபவர்களின் சேவை பெறப்படுகிறது. 1991ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய நூலகச் சேகரிப்பைச் சேர்ந்த 2039 நூல்கள் வெளிக்கள நூல் மட்டை கட்டுபவர்களால் மட்டைக்கட்டி திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நூல் மட்டை கட்டும் கூடம்

தேசிய நூலகத்தின் நூல்களை மட்டை கட்டுவதற்கும் பிற பாதுகாப்பு சேவைகளின் பொருட்டு நூல் மட்டைகட்டும் கூடம் ஒன்று 1989ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தேசிய நூலகத்தின் நூல்களை மட்டை கட்டுதல், பாதுகாப்பான துண்டுப்பிரசுரம் பெட்டி தயாரித்தல் போன்ற பல பேணற் செயற்பாடுகள் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன.

இப்பிரிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களையும் கொள்வனவு செய்யும் தொழிற்பாடு தொடர்ந்து நடைபெறுகிறது. 1991ஆம் ஆண்டில் தேசிய நூலக சேகரிப்பைச் சேர்ந்த 311 நூல்கள் இப்பிரிவினால் மட்டை கட்டப்பட்டன.

பிற பேணற் செயற்பாடுகள்

நச்சுப் புகையூட்டுதலும் துப்புரவு செய்தலும்

தேசிய நூலகத்தின் சேகரிப்பை நல்ல முறையில் பேணுவதற்கு தொடர்ந்து பரிசோதித்து சகல நூல்களையும் துப்புரவாக வைத்திருப்பதுடன் நச்சுப்புகையூட்டலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் பொருட்டு விசேட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வருடத்தில் 475 நூல்கள் நச்சுப்புகையூட்டுவதற்காகக் கிடைக்கப் பெற்றது.

தற்போது உள்ள நச்சுப்புகையூட்டும் பெட்டி போதுமானதாக இல்லாததனால் புதிய திட்டப்படி இரு நச்சுப் புகையூட்டும் பெட்டிகளை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஓலைச் சுவடிகளைப் பேணுதல்

தேசிய நூலகச் சேகரிப்பில் பல அரிய ஓலைச் சுவடிகளும் அடங்குகின்றன. ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தலின் பொருட்டு விசேட பாதுகாப்பு முறைகள் வையாளப்படுகின்றன. தேசிய விற்பன்னர்களின் உதவியைப் பெற்று மிகப் பழைய பாரம்பரிய முறைகளுக்கு ஏற்பட ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல் இங்குள்ள விசேடமாகும். இவ்வருடத்துள் தொடர்ந்து இச்செயற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிடற் பிரிவு

சபையின் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து முடிப்பதற்காக தேவையான திட்டங்களை தீட்டுமுகமாகவும், மேற்பார்வை செய்யும் பொருட்டும் இவ்வருடம் திட்டமிடற் பிரிவு ஒன்றுஏற்படுத்தப்பட்டது. திட்டங்களைத் தயாரித்தல், அவற்றைச் செயற்படுத்துதல் மேற்பார்வை செய்தல், புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் பரிபாலனச் செயற்பாடுகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்துதல் பேன்றவற்றின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை செய்தல் இப்பிரிவின் செயற்பாடாகும்.

முடிவுரை

இலங்கைத் தேசிய நூலகத்தின் செயற்பாடுகளை நன்கு செய்து முடிப்பதற்கு, கல்வி, உயர்கல்வி அமைச்சில் இருந்தும், சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களிடம் இருந்தும் சபையின் அலுவலகர்களிடம் இருந்தும் எமக்குக் கிடைத்த உதவிக்கு நாம் மிகவும் நன்றியுடையவராவோம். அதேபோல் இந்த அறிக்கையை ஒழுங்குபடுத்துவதில் எமக்கு உதவிய அலுவலர்களுக்கும் எமது நன்றி உரித்தாகும்.

எம்.எஸ்.யு. அமரசிறி,
பணிப்பாளர்,
இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை
இல. 14, சுதந்திர வழி,
கொழும்பு - 07.

ஈஸ்வரி கொறயா,
தலைவர்

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை

கணக்குறிக்கை

(1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபைச் சட்டத்தின் 19 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பெற்றது.)

1991

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை
இல.14, சுதந்திர வழி
கொழும்பு 07

அலகு - 6

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13(6)ம் பிரிவிற்கேற்பவும் 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபைச் சட்டத்தின் 18(1)ம் பிரிவிற்கு அமைவாகவும் சமர்ப்பிக்கப்படும் 1991 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கை.

1991 டிசம்பர் 31ம் திகதியிலான ஐந்தொகை

1991 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவுறும் ஆண்டிற்கான வருமானனச் செலவுக் கணக்கு

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை
1991 டிசம்பர் 31ம் திகதியிலான ஐந்தொகை

1990ம் ஆண்டு			1991ம் ஆண்டு	
		சபையின் நிதிக்கணக்கு		
68,337,666		ஜனவரி 01 ஆந் திகதிய மீதி	81,443,352	
13,105,686		கூட்டு: நடப்பு வருடத்தில் வரவு	3,494,378	
	81,443,352			84,937,730
		மானியங்களும் நன்கொடைகளும்		
855,834		ஜனவரி 01 ஆந் திகதிய மீதி	887,932	
32,098		கூட்டு: நடப்பு வருடத்தில் கிடைத்த கொடைகள்	189,112	
	887,932			1,077,044
		ஒதுக்கீடுகள்		
9,791,235		மூலதனச் சொத்துக்களின் கொள்வனவிற்காக அரசு வழங்கிய நன்கொடையில் மீதி	11,438,072	
239,563		ஊழியர் சேவைக்கால வெகுமதிக்கான ஒதுக்கீடு	349,600	
		பூஜாவளிய அச்சிடுவதற்காக கிடைத்த உதவி	100,000	
	10,030,798			11,887,672
		நடைமுறைப் பொறுப்புக்கள்		
131,250		நானாவித முதலீடுகள்	116,611	
193,643	324,893	நானாவித கடன்கொடுத்தோர்	343,978	460,589
	92,689,975			98,363,035
		சொத்துக்கள்		
		காணியும் கட்டிடமும்		
52,087,623		தேசிய நூலக கட்டிடம்	52,087,623	
726,216		கட்டிடத்தை மேலும் அபிவிருத்தி செய்தல்	726,216	
395,355		சபையின் சுவர் ஓவியங்கள்	395,355	
	53,209,194			53,209,194
		நிலையான சொத்துக்கள்		
7,569,188		அலுவலக மரத்தளபாடங்கள் (தேறிய பெறுமதி)	7,145,832	
37,377		நூலக உபகரணங்கள் (தேறிய பெறுமதி)	41,139	
767,089		மோட்டார் வாகனம் (தேறிய பெறுமதி)	690,380	
4,604,370		தேசிய நூலகத்தின் நூலிருப்பு (தேறிய பெறுமதி)	5,835,445	
41,263		நூற்பரிமாற்றச் சேவை நூலிருப்பு (தேறிய பெறுமதி)	30,948	
5,000		அறிவுசார் சொத்துக்களின் சேகரிப்பு (தேறிய பெறுமதி)	5,000	
30,960		நாடோடி இலக்கியப் பிரிவிற்காகப் பெற்றுக் கொண்ட உபகரணங்கள்	30,960	
968,767		சமூக விஞ்ஞான நூலகத்தின் பொருட்டு பெறப்பட்ட நூல்கள்	1,580,576	
	14,024,014			15,360,280

		நடைமுறைச் சொத்துக்கள்		
56,185		சர்வதேச நூற் பரிமாற்ற திட்டத்திற்கான நூல்	27,702	
5,161,211		விற்பனை, பகிர்ந்தளிப்புக்கான நூலிருப்பு	5,813,602	
142,149		நூலக எழுது கருவிகளின் இருப்பு	112,119	
134,340		அலுவலக எழுது கருவிகளின் இருப்பு	123,113	
385,489		அன்பளிப்புக்கான நூலக உபகரணங்கள்	1,011,139	
	5,879,374	அச்சிடுவதற்கான எழுதுகருவிகளின் இருப்பு	675,383	7,763,058
		வைப்புக்கள்		
15,500,000		திறைசேரி வைப்பு	16,000,000	
469,338		நிலையான வைப்பு	469,338	
105,917	16,075,255	பல்வேறு வைப்புக்கள்	138,566	16,607,904
		பல்வேறு நடைமுறைச் சொத்துக்கள்		
2,165,864		கடன்பட்டோரும் முற்பணக் கொடுப்பனவுகளும்	2,183,029	
852,719	3,018,583	ஊழியர் கடன் முற்பணம்	1,036,627	3,219,656
		காசு மீதி		
478,955		டிசம்பர் 31ம் திகதிய காசுப்புத்தக மீதி	2,197,943	
1,600	480,555	சில்லறைச் செலவு முற்பண மீதி	5,000	2,202,943
	92,686,975			98,363,035

ஈஸ்வரி கொறெயா
தலைவர்

எம்.எஸ்.யூ. அமரசிறி
நெறியாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கணக்குகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13(1)ம் பிரிவிற்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) விதிகளுக்கும் அமைவாக எனது வழிகாட்டலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிதிச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவிற்கமைய பிரசுரிக்கப்பட வேண்டிய இக்கணக்குகள் பற்றிய எனது அவதானங்கள் அடங்கிய அறிக்கை இதே திகதியிடப்பட்டு சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(எஸ்.சீ. மாயாதுன்ன)
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
1993 ஒக்ரோபர் 29 ஆந் திகதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
கொழும்பு - 07.

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை
1991 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு

1990 ஆம் ஆண்டு		அரச கொடைகள்	1991 ஆம் ஆண்டு	
12,000,000		நடைமுறைச் செலவிற்கான அரச கொடைகள்	12,000,000	
	12,000,000			12,000,000
		வெளியீடுகளுக்கான சந்தாப்பணம்		
12,712		தேசிய நூற்பட்டியல் விற்பனை	63,186	
3,181		நூலக வெளியீடுகள் விற்பனை	1,279	
10,943		நூல் விற்பனையால் கிடைத்த இலாபம்	15,110	
	26,836			79,575

		பெற்றுக் கொண்ட வட்டி		
37,643		நிலையான வைப்பிற்கான வட்டி	62,107	
1,576,027		திறைசேரி வைப்பிற்கான வட்டி	1,512,419	
35,882		துயர் கடன் வட்டி	58,806	
1,871		விசேட முற்பண வட்டி	2,405	
	1,651,423			1,635,737
		உதிரி வருமானங்கள்		
4,433		நூலக எழுது கருவிகள் விற்பனையில் கிடைத்த இலாபம்	3,336	
75		பல்வேறு வருமானங்கள்	8,817	
98,140		மதிப்பீட்டுக் கட்டணம்	60,221	
11,994		புகைப்படப் பிரதிகளிற்காக கிடைத்த பணம்	16,479	
5,500		கேள்விப்பத்திர படிவங்களினால் கிடைத்த பணம்	4,200	
1,170		தங்குமிடக் கட்டணம்	870	
2,750		ஞாபகார்த்த மலர் விற்பனை	–	
4,215		வாசகர் சேவை பதிவுக் கட்டணம்	5,176	
2,962		கேட்போர் கூடத்திற்காக கிடைத்த பணம்	15,825	
–		கிடைத்த வாடகை	300,000	
–		எரிபொருளுக்காகப் பெற்றுக் கொண்ட பணம்	1,800	
2,967		பாவனைக்கு பொருத்தமற்ற பொருட்கள் விற்பனை	590	
–		உடன்படிக்கைகளின் மூலம் பெற்றுக் கொண்ட பணம்	12,100	
-		நூற்கண்காட்சிகளினால் கிடைத்த பணம்	55,945	
-		நூல் அபிவிருத்தித் திட்ட விண்ணப்பக் கட்டணம்	4,830	
-		இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள்	11,928	
	133,207			502,117
	13,811,465			14,217,429

1990 இன் செலவினம்			1991 இன் செலவினம்	
		அலுவலர்கள் சம்பளங்களும் பிற படிகளும்		
3,318,570		அலுவலர்கள் சம்பளம்	3,577,804	
303,680		விசேட வாழ்க்கைச் செலவுப்படி	300,337	
6,300		சபை அங்கத்தவர் படிகள்	19,500	
117,309		மேலதிக நேர வேலை	91,569	
31,155		சபைக்குழு அங்கத்தவர்களின் படிகள்	35,800	
–		கட்டிட வேலைகளைப் பரிசீலனை செய்வதற்கான கொடுப்பனவு	2,500	
	3,777,014			4,027,510
		பிரயாணச் செலவு		
48,718		சபை அலுவலர்கள் பிரயாணச் செலவு	33,175	
175,083		வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கான பிரயாணச்செலவு	242,217	
1,222		குழு அங்கத்தவர்களின் பிரயாணச் செலவு	1,746	
	225,023			277,138
		தேவையான உபகரணங்களும் வழங்கலும்		
202,149		எழுதுகருவிகளும் அச்சிடப்பட்ட படிவங்களும்	288,810	
12,676		அலுவலக உபயோகங்களுக்காக உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல்	19,684	
	214,825			308,494
		மூலதனச் சொத்துக்களின் பராமரிப்பும் புதுப்பித்தலும்		
986,063		கட்டிடப் பராமரிப்பு	418,359	

153,353		அலுவலக உபகரணங்கள் பேணலும் புதுப்பித்தலும்	260,536	
211,403		சொத்துக்கள் காப்புறுதி	223,796	
6,726		சபையின் காணியைப் பராமரித்தல்	-	
	1,357,545			902,691
		மோட்டார் வாகனப் பராமரிப்பு		
125,487		எரிபொருள்	143,221	
119,556		மோட்டார் வாகனங்களைப் புதுப்பித்தலும் பராமரித்தலும்	123,228	
6,250		மோட்டார் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம்	8,750	
17,924		மோட்டார் வான காப்புறுதி	25,281	
	269,217			300,480
		போக்குவரத்தும் பிற சேவைகளும்		
943,959		மின்சாரம்	870,853	
181,608		தொலைபேசிக் கட்டணம்	203,244	
9,263		போக்குவரத்து பண்டகசாலை தாமதக் கட்டணமாகியன	36,156	
60,000		கணக்காய்வுக் கட்டணம்	65,000	
65,712		தபால் கட்டணம்	69,190	
84,675		விளம்பரக் கட்டணம்	76,075	
28,585		அச்சிடல் கட்டணம்	-	
10,020		வங்கிக் கட்டணம்	9,494	
25,176		சில்லறைச் செலவுகள்	15,706	
25,020		விருந்தோம்பற் செலவினம்	20,384	
141,707		பாதுகாப்புச் செலவினம்	249,571	
5,509		வருமானவரி	4,741	
1,400		ஒழுக்காற்று நடவடிக்கையிலான செலவு	-	
73,459		உள்ளக திட்டமிடல் தொழிலிலான செலவு	1,000	
11,910		அலுவலர் பயிற்சி	13,300	
5,710		வைத்திய பரிசோதனைக் கட்டணம்	-	
255,239		சபைக்கட்டிடத்திற்குத் திரைச்சீலையிடுதல்	-	
760,031		தேசிய நூலக திறப்பு விழாச் செலவு	-	
8,423		ஊழியர் நலன்பேணற் செலவு	16,983	
-		புகையிரத பருவகாலச் சீட்டுக் கட்டணம்	7,276	
	2,697,406			1,658,975
		நூலக சேவைகள் செலவினம்		
		நூலீட்டற் பிரிவு		
170,695		நூல் பேணல் தொழிற்பாடு	126,612	
24,198		நூல் பரிமாற்றத்திட்ட நன்கொடை (சர்வதேச)	53,898	
63,869		தேசிய ஒருங்கிணைந்த நூற்பட்டியலை ஒழுங்குபடுத்தல்	25,560	
34,962		சர்வதேச நூலகங்களில் அங்கத்துவம் பெறல்	32,527	
2,254		சர்வதேச தரப்படுத்தப்பட்ட நூல் இலக்கத் திட்டம்	8,772	
2,377		கணணிப் பிரிவிலான செலவு	-	
-		நூலக எழுதுகருவிகளை அச்சிடுதல்	38,694	
	298,356			286,063
		தேசிய நூற்பட்டியலாக்கப் பிரிவு		
160,057		தேசிய நூற்பட்டியல் தொகுத்தல்	174,746	
43,140	203,197	தேசிய நூற்பட்டியல் அட்டைகள் தயாரித்தல்	21,562	196,308

		நூலக ஆராய்ச்சிப் பிரிவு		
8,985		நூலக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்	2,564	
1,241,931		நூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களின் பெறுமதி	2,114,841	
24,250		நூலக இலக்கியங்களையும் வெளியீடுகளையும் வெளியிடுதல்	430,147	
9,825		அன்பளிப்புச் செய்யப்பட்ட உபகரணங்களின் பெறுமதி	568,850	
49,750		நூல் அபிவிருத்தித்திட்ட செலவினம்	37,926	
81,179		கையெழுத்துப் பிரதிகள் மதிப்பீட்டுக் கட்டணம்	80,468	
91,334		நூலக கண்காட்சிகள் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்	141,466	
-		சர்வதேச நூற்கண்காட்சியிலான செலவு	326,865	
	1,507,255			3,703,127
		நூலகக் கல்வியும் பயிற்சியும்		
118,403		நூலக கல்வி மற்றும் பயிற்சித் திட்டம்	58,440	
	118,403			58,440
		ஓய்வூதியம், ஓய்வுகால கொடுப்பனவு, சேவைக்காலத்திற்கான வெகுமதி		
412,310		ஊழியர் சேமலாப நிதியம்	445,794	
103,078		ஊழியர் நம்பிக்கை நிதியம்	111,608	
181,182		சேவைக்காலத்திற்கான வெகுமதி ஒதுக்கீடு	193,957	
	696,570			751,359
		தேய்மான ஒதுக்கீடு		
240,385		அலுவலக உபகரணங்கள்	756,919	
85,232		மோட்டார் வாகனம்	76,709	
4,153		நூலக உபகரணங்கள்	3,737	
13,755		நூல் பரிமாற்றத்திட்டத்திற்கான நூற்தொகை	10,316	
	343,525			847,681
		பதிவழிக்கப்பட்ட உபகரணங்கள்		
	-	அலுவலக உபகரணங்கள்	8,094	8,094
	2,103,127	மிகை வருமானம்		891,070
	13,811,465			14,217,429

எம்.எஸ்.யூ. அமரசிறி,
நெறியாளர்

ஈஸ்வரி கொரெயா,
தலைவர்.

எனது இல : EC/R/LS/AA/91

திகதி : 1993 ஒக்றோபர் 29

தலைவி
இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை,

1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் கணக்குகள் தொடர்பாக 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் அடிப்படையில் அமைந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி முடிவடைந்த இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் கணக்கானது 1970ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நூலக சேவைகள் சபைச் சட்டத்தின் 18ஆம் பிரிவிற்கும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13 (1) ம் பிரிவுடன் திருத்தி வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) விதிகளுக்கு அமைவாகவும் எனது வழிகாட்டலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவிற்கமைய சபையின் வருடாந்த அறிக்கையுடன் இணைத்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற எனது அவதானிப்புக்கள், இவ்வறிக்கையில் இடம் பெறுகின்றது. நிதிச்சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் அடிப்படையில் அமைந்த விரிவான அறிக்கையொன்று 1993 மே மாதம் 27ஆம் திகதி சபையின் தலைவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1:2 கணக்காய்வின் நோக்கம்

இவ்வறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்கள், வியாக்கியானங்கள், கண்டு பிடிப்புக்கள், போன்றன கணக்காய்வு தொடர்பாக வழங்கப்பட்ட நிதிக்கூற்று விமர்சனங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் பற்றி செய்யப்பட்ட உறுதியான பரிசோதனைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டனவாகும். இக்கருத்துக்கள் மற்றும் பரிசோதனையின் நோக்கமும் அதன் விரிவும் எனக்குக் கிடைத்துள்ள உத்தியோகத்தரின் அளவு, மற்றும் மூலவளங்கள், நேரம் என்ற வரையறைகளுக்கு உட்பட்டு இயலுமானவரை பரந்தளவில் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வின் விரிவு, நோக்கு என்பவற்றைத் தீர்மானிப்பதற்கு நிதிச் சட்டத்தின் 13ம் பிரிவின் (3)ம் (4)ம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளன.

02. கணக்குகள்

2:1 அபிப்பிராயம்

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்டது போன்ற அடிப்படை ஒன்றிற்கு அமைவாகவும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுமான கணக்கியல் தத்துவங்களின் அடிப்படையிலும் திருப்திகரமாக இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நான் அபிப்பிராயப்படுகிறேன்.

2:2 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகளின் அடிப்படையில் 1991ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்தில் சபையின் செயற்பாடுகளின் விளைவாக, மீளவரும் செலவினத்தின் பொருட்டு அரசு வழங்கும் கொடையை கணக்கில் எடுப்பதன் முன்பு ரூ. 11,108,929 பற்றாக்குறையாக விழுந்தது. இதற்கு முன்னைய வருடத்தில் அரசாங்க கொடையை கணக்கில் எடுப்பதற்கு முன்பான பற்றாக்குறை ரூ. 9,896,873 ஆகும். மீள் வரும் செலவினத்திற்கான அரச கொடையான ரூ. 12,000,000 கணக்கில் எடுத்த பின் ரூ. 891,071 மேலதிகமாகத் காட்டியது. முன்னைய ஆண்டில் அரச கொடையான ரூ. 12,000,000 கணக்கில் எடுத்த பின் ரூ. 2,103,127 மேலதிகமாக இருந்தது. கருத்திற் கொள்ளப்பட்ட வருடத்தினதும், அதற்கு முன்னைய வருடத்திற்குமான நிதி முடிவுகள் பற்றிய சுருக்கம் கீழ் தரப்பட்டுள்ளது.

	டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடம்			
	1991		1990	
	ரூ	ரூ	ரூ	ரூ
வருமானம்				
சபையின் வெளியீடுகளுக்கான சந்தாப்பணம்	79,575		26,.836	
நிலையான வைப்புக்களுக்கான வட்டி	62,107		37,643	
திறைசேரி வைப்புகளுக்கான வட்டி	1,512,419		1,576,027	
பிற வட்டி வருமானங்கள்	61.211		37,753	
நூல் அபிவிருத்தித் திட்டத்தில் கிடைத்த மதிப்பீட்டுக் கட்டணம்	60,221		98,140	
உதிரி வருமானங்கள்	141,896		35,067	
வீட்டு வாடகை	300,000	2,217,429	–	1,811,466
செலவினம்				
தனிநபர், சம்பளங்களும் ஏனைய படிகளும்	4,778,869		1,473,585	
நிர்வாக, நிறுவனச் செலவுகள்	2,244,605		3,137,255	
நூலக சேவைகள்	4,047,630		1,924,013	
தேசிய நூற்பட்டியல் தொகுத்தல்	196,308		203,198	
பெறுமானத் தேய்வு	847,681		343,525	
மூலதனச் சொத்துக்கள் பேணலும், புதுப்பித்தலும்	1,203,171		1,626,763	
பதிவழிக்கப்பட்ட உபகரணங்களினால் இழப்பு	8,094	13,326,358	–	11,708,339
